2022 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு கூலி மிகவும் குறைவாக இருக்கிறது என்று கருதிதான், அங்கு வெறும் லுங்கிதான் தயார் செய்து கொண்டிருந்த நிலையில், நெசவாளர்களுக்கு அதிக வருமானம் வர வேண்டும் என்பதற்காக, அவர்கள்* modern *ஆக உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்காக, அதே குடியாத்தம் பகுதியில் ஒரு திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி, நாங்கள் சென்று தொடங்கி வைத்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று, நெசவாளர்களிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

68—

சார்–பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***3044—திருமதி ஆ. தமிழரசி:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை பதிவு மாவட்டம், மானாமதுரை சார்–பதிவாளர் அலுவலகம் 1894 ஆம் ஆண்டு முதல் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கட்டடத்தில் கடந்த மாதம் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகிறது. எனவே, மானாமதுரை

சார்–பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான தேவை எழவில்லை என்பதனை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.*

திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானாமதுரை தொகுதியில் உள்ள சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடம் 1894 ஆம் ஆண்டு கட்டப்பட்டு, தற்போது 122 ஆண்டுகளை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இக்கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதுமட்டுமல்லாமல், இக்கட்டடம் தரைமட்டத்திலிருந்து 10 அடி பள்ளத்தில் உள்ளது. மழைக் காலங்களில், மக்கள் அங்கு சென்று வருவதற்கும், அலுவலகப் பணிகளை மேற்கொள்வதற்கும் இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013 ஆம் ஆண்டில் விரிவாக்கம் செய்யப்பட்ட மானாமதுரை சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடத்தில், பதிவு வைப்பறை மற்றும் கணினி அறை ஆகியவற்றுடன், பதிவுக்கு வரும் பொது மக்கள் வசதிக்காக கழிப்பிட வசதி, வாகனம் நிறுத்துமிடம், குடிநீர் வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளும் உள்ளன. மேலும், பொது மக்கள் அமர்வதற்காக இருக்கை வசதி, மேற்கூரை வசதி, அலுவலக முன்பகுதி நடைபாதையில் சாய்வுதளம் போன்ற வசதிகளுடன், ரூ.5,80,000/– மதிப்பீட்டில் கடந்த மாதம் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகிறது. எனவே, மானாமதுரை சார்–பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான தேவை எழவில்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.*

2022 ஏப்ரல் 7]

திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம் கட்டப்பட்டு 122 ஆண்டுகள் ஆகிவிட்டன. மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அந்தக் கட்டடத்தில், தற்போது மராமத்துப் பணிகள் செய்திருந்தாலும், அந்தக் கட்டடம் மிகவும் பழமையானது, பழுதடைந்துள்ளது என்பதனால், அந்தக் கட்டடத்தை முழுவதுமாக இடித்துவிட்டு, புதிதாக ஒரு கட்டடம் கட்டித் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். தாயுள்ளத்தோடு ஆட்சி நடத்தி வருகின்ற தளபதியார் அவர்களின் அரசில், மானாமதுரை சார்–பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களே மானாமதுரைக்கு வருகை தந்து, அதற்கு அடிக்கல் நாட்ட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, மானாமதுரை சார்–பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்கள்.*

திருமதி எஸ். தேன்மொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளிமையின் சாமானியர் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையிலுள்ள சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளது. அங்கு அடிப்படை வசதிகள் இல்லாததால், அலுவலர்களும், பொது மக்களும் அவதிப்படுகிறார்கள். எனவே, இந்தப் பழைய கட்டடத்தை அகற்றி, புதிய சார்–பதிவாளர் அலுவலகம் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2022 ஏப்ரல் 7

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய 575 சார்–பதிவாளர் அலுவலகப் பகுதிகளும் இன்றைக்கு மறு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. ஏனென்று சொன்னால், ஒரு தாலுகாவிற்கான பதிவு அலுவலகம் மற்றொரு தாலுகாவிலும், வேறு மாவட்டத்திலும் இருக்கின்ற காரணத்தினால், அந்தந்த மாவட்டத்திலும், அந்தந்த தாலுகாவிலும் சார்-பதிவாளர் அலுவலகங்கள் அமைவதற்கான ஏற்பா ட்டைச் செய்துகொண்டிருக்கிறோம். தவறுகள் நடக்காமல் இருப்பதற்கும், பதிவு செய்தவர்கள் உடனடியாகப் பட்டா மாறுதல் செய்வதற்கு வசதியாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரிலே தமிழகம் முழுவதும் இந்தப் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். எனவே, இந்தப் பணிகள் முடிந்தவுடன், எங்கெங்கு பழைய கட்டடங்கள் இருக்கின்றனவோ அந்தப் பகுதிகளின் தேவைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்ப படிப்படியாக புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.*

திரு. நிவேதா எம். முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் சார்–பதிவாளர் அலுவலகம் 100 ஆண்டுகள் பழமையான ஒரு பதிவு அலுவலகம். வெயில் காலங்களில் அது பயன்பாட்டுக்கு உகந்ததாக இருக்கிறது. மழைக் காலங்களில் ஒழுகுகின்ற காரணத்தால், அங்கு பொருட்களையும், பேப்பர்களையும் வைப்பதற்குத் தகுதியற்ற நிலைமை இருப்பதனால், வாடகைக் கட்டடத்திற்கு மாற்ற வேண்டிய நிர்பந்தத்தினால் கனிவாகக் கவனித்து, அதற்கு முன்னுரிமை கொடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கட்டடத்தைக் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

2022 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலே இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களோடு ஒப்பிடுகையில், தமிழகம் ஒரு முன்மாதிரி மாநிலமாக, இன்றைக்கு மாற்றுத் திறனாளிகள்கூட பதிவு அலுவலகத்திற்குச் செல்கிறபோது அவர்களும் அமரக்கூடிய வகையிலே, அவர்களும் பத்திரம் பதிவு செய்வதற்கு ஏதுவாக இருக்கக்கூடிய வகையிலே, வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொத்தம் இருக்கக்கூடிய 575 சார்—பதிவாளர் அலுவலகங்களில் 533 சார்—பதிவாளர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களிலும், மீதமுள்ள 42 கட்டடங்கள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. அதேநேரத்திலே, முதல் மாடியிலே இயங்குகின்ற அலுவலகங்களை தரைதளத்திற்கு மாற்றி, மாற்றுத் திறனாளிகளுக்கு வேண்டிய வசதி செய்து தரும் பணிகளும், அரசுக் கட்டடங்களில் இயங்கக்கூடிய 14 அலுவலகங்களில் lift வசதி செய்யக்கூடிய பணிகளும் இப்போது நடைபெற்று வருகின்றன. 100 ஆண்டுக் காலத்திற்கும் மேலாக இருக்கக்கூடிய கட்டடங்களிலெல்லாம் ஆய்வுப் பணிகள் முடிவுற்றதற்குப் பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, படிப்படியாக புதிய கட்டடம் நிச்சயம் கட்டித் தருவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. S. அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் இளைஞரணிச் செயலாளர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வந்தவாசி சட்டமன்றத் தொகுதி, பெரணமல்லூர் பேரூராட்சியில் உள்ள மிகவும் பழமைவாய்ந்த பத்திரப் பதிவு அலுவலகக் கட்டடத்தில், மழைக்காலங்களில் dampness, அதாவது ஈரக் கசிவு ஏற்பட்டு, ஆவணங்கள் பழுதடைகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. செய்யாறு வட்டம், வந்தவாசி வட்டம்,

சேத்துப்பட்டு வட்டம், ஆரணி வட்டம் ஆகிய வட்டங்களில் உள்ள சுமார் 150 கிராமங்களுக்கும் மேற்பட்ட பகுதிகளை உள்ளடக்கி அந்தப் பத்திரப் பதிவு அலுவலகம் செயல்பட்டு வருகிறது. ஆகவே, இதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அலுவலகத்திற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல், கழகத் தலைவர், முத்தமிழறிஞர் அவர்கள் 2006–2011 ஆம் ஆண்டுகளில் முதலமைச்சராக இருந்தபோது தேசூர் பேரூராட்சியில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் திறக்கப்பட்டிருந்தது. தற்சமயம் அது செயல்படாமல் உள்ளது. அந்த அலுவலகத்தை மீண்டும் செயல்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, படிப்படியாக இந்தச் சார்–பதிவாளர் அலுவலகங்கள் மறு ஆய்வு செய்யப்பட்டவுடன் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த ஆண்டு நிதிநிலைமைக்கேற்ப இவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து, கட்டித் தரப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

69—

குடமுழுக்கு

***3125—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை தொகுதி, அய்யர்மலை அருள்மிகு ஸ்ரீ இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?